**அத்தனகல்ல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அத்தனகல்ல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அத்தனகல்ல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லா சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 8,127,360 தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | வருடத்திற்காக ஏனைய விரிவான வருமான பெறுமதி தனியாக காண்பிக்கப்படல் வேண்டும். அந்த கணிப்பீட்டின் போது 2021 ஆம் ஆண்டில் கிடைத்த மூலதன செலவின | 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான ஏனைய விரிவான பகுதி பூரணப்படுத்தப்படும் என அறியத் தருகின்றோம். | ஏனைய விரிவான வருமானக் கூற்றில் பெறுமதி சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மானியத்தின் பெறுமதி விளக்க குறிப்பு இலக்கம் 10 இன் பிரகாரம் ரூபா 67,423,908 ஆக விரிவான வருமானக் கூற்றில் ரூபா 66,259,763 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. நிதி விளைவுகளில் தாக்கம் இல்லாதிருந்த போதிலும் இதன் காரணமாக ஆண்டிற்கான விரிவான வருமானம் ரூபா 1,164,145 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்த ரூபா 211,291 ஆன நூலகப் புத்தகங்கள் மூலதன செலவின மானியக் கணக்கில் சீராக்குவதற்கு பதிலாக அந்த ஆண்டின் விரிவான வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மூலதன செலவின மானியக் காலக்கழிவுப் பெறுமதி ரூபா 21,129 மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகையில் இனங்காணப்படாத மூலதன செலவின மானியம் ரூபா 190,162 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | வேலை பூர்த்தி செய்யப்பட்ட 08 மாகாண சபை செயற்திட்டங்களின் வேலை பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 5,245,251 ஆக இருந்த போதும் அது ரூபா 5,769,777 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் கொடுப்பனவு செய்யப்படாத சபை வேலைகளின் 21 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 7,370,873 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஊ) கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்பட்ட 42 செயற்திட்டங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 24,906,238 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) 2021 ஆம் ஆண்டின் போது 10 கணினி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,628,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(1) | 2004 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது 185 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட பெறுமதி ரூபா 3,906,746 ஆன கேள்வி வைப்பு, ஒப்பந்த பிணைகள் மற்றும் பொது வைப்பு என்பவற்றை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புச் செய்வதற்கு நாட்டில் காணப்பட்ட தொற்று நிலைமையால் முடியாதிருந்தது. தற்போது உரிய தரப்பினருக்கு மீண்டும் அறிவித்துள்ளமையால் அந்த ஆண்டுகளின் வைப்புக்களை விரைவாக வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வைப்புக்களை மீள செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1946 இன் 30 ஆம் இலக்க வாடகை மற்றும் மதிப்பீட்டுச் சட்டத்தின் இலக்கம் 20 ஆம் பிரிவு | ஆதனவரி மதிப்பீடு மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து 05 வருடங்களுக்கு ஒரு தடவை செய்ய வேண்டியிருந்த போதிலும் எகடபொத்த மற்றும் மொகடபொத்த உப அலுவலகங்களில் 13,738 ஆதனங்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 13 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டின் | மதிப்பீட்டு திணைக்களத்தில் உள்ள நிலைமையின் அடிப்படையில் இந்த தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மீள் நினைவூட்டுதல் அனுப்புவதுடன் தாமதமின்றி மதிப்பீடு செய்து புதிய ஆதனவரி வீதத்தை பெற்றக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் வரி அறவிடப்படுகின்றது. | | |
| (இ) | 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்களத்தின் (மே.மா) சுற்றறிக்கை | உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரியதாக வரி தொடர்பாக ஒவ்வொரு வாடகை உடன்படிக்கையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு கட்டிடத்திற்கும் அல்லது காணிக்குமுரிய உடன்படிக்கை செய்த திகதியிலிருந்து ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு தடவை அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரின் அல்லது பட்டயப் பெற்ற மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீள்திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் நிட்டம்புவ சந்தை தொகுதி மற்றும் அதனை அண்மித்த 115 கடைகளின் வாடகை உடன்படிக்கை 20 வருடங்களை விட பழையதாக இருந்த போதிலும் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | நிட்டம்புவ சந்தை தொகுதி மற்றும் அதனை அண்மித்த கடைகளின் கோவைகள் பழைய உடன்படிக்கையை புதுப்பிக்க வேண்டிய கால எல்லை காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. கடை உரிமையாளர்களுக்கு சொந்தமாக காணப்படுகின்ற உரித்துறுதிகளின் திகதி குறித்துரைக்கப்படாமல் வாடகைக் காலம் பேணிச் செல்லப்படுகின்றது என்ற பிரிவு உள்ளடக்கப்பட்ட மையால் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடல் நிராகரிக்கப்பட்டிருந்தது | சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு மேற்கொண்டு புதிய வீதத்தின் கீழ் உடன்படிக்கை செய்து வாடகையை அறவிடல் வேண்டும். தேவையான போது சட்டரீதியான ஆலோசனைகளை பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

---------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 76,585,446 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 82,341,448 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

--------------------------------

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

-----------------------------------------------------------

சபையின் வருமானம் சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 30,790,321 ஆக இருந்ததுடன் 2022 ஏப்ரல் | நிலுவை ஆதனவரியை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | மாதம் வரையில் அந்த நிலுவை மீதி ரூபா 26,642,309 ஆக இருந்தது. காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதியில் 10 வருடங்களை விட மேற்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 7,382,836 ஆகவும் 5 இற்கும் 10 வருடங்களுக்கு இடையிலான பெறுமதி ரூபா 8,330,826 ஆகவும், 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான பெறுமதி ரூபா 7,546,713 ஆகவும், 1 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான பெறுமதி ரூபா 5,143,452 ஆகவும், 01 வருடத்திற்கு குறைந்த பெறுமதி ரூபா 2,386,494 ஆகவும் இருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போதிலும் நாட்டில் ஏற்பட்டிருந்த தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அமுல்படுத்த முடியாதிருந்தது. | வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை<br>--------------------------- | | |
| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 2,643,620 ஆக இருந்ததுடன் 2022 யூன் 01 ஆந் திகதி வரையில் அது ரூபா 2,224,738 ஆக காணப்பட்டது. அந்த நிலுவைக் கடை வாடகை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட வெயாங்கொட உப அலுவலகத்திற்குரிய முத்திரை வைக்கப்பட்ட 07 கடைகளிலிருந்து வாடகையான ரூபா 768,610 உள்ளடங்கியிருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட தொற்றுநோயின் நிலைமையின் அடிப்படையில் கடைகள் மூடப்பட்டிருந்தமை, வாடிக்கையாளர்கள் கடைகளுக்கு வருகை தராமையால் கடை உரிமையாளர்களுக்கு வாடகை செலுத்துவதற்கு வசதியீனம் ஏற்பட்டதன் காரணமாக அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் சபைக்கு கிடைத்த 311 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 119 இற்காக 2022 யூன் 01 ஆந் திகதி வரையில் தீர்வு வழங்கப்படாதிருந்ததுடன் கிடைத்த முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது தீர்க்கப்பட்டதன் செயல்முன்னேற்றம் 38 சதவீதமாக இருந்தது. | முறைப்பாடுகளின் விசாரணை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்ட போதிலும் அந்த உத்தியோகத்தர் களுக்கான கடமைகள் கணிசமான அளவு கையளிக்கப்பட்டமையால் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்குரிய காலம் காணப்படாதிருந்தமையால் முறைப்பாடுகள் குவிந்திருந்தது. தற்போது முறைப்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. | பொதுமக்கள் முறைப்பாடு களுக்காக விரைவாக தீர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 39980 என்ற காணி வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அத்தனகல்ல பிரதேச சபையால் 2019 மே 15 ஆந் திகதி ரூபா 1,876,800 தொகை சபை நிதியத்திலிருந்து வழக்கின் முறைப்பாட்டு தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 மே 13 ஆந் திகதிய கடித்தில் பிரதேச சபை தலைவரால் இந்த நட்டம் தொடர்பாக பொறுபினை நிர்ணயிக்கும் பரிசோதனையொன்றை செய்து தருமாறு கம்பஹா உள்ளுராட்சி ஆணையாளரிடம் கோரிக்கையொன்று மற்றும் பின்னர் மீள்நினைவூட்டலும் அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2022 யூன் 01 ஆந் திகதி வரையிலும் அது மேற்கொள்ளப்படாமையால் நட்டம் ஏற்பட்டு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து ஏற்பட்ட | விசாரணை அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நட்டத்தை அறவிட முடியாதிருந்தது. | | |
| (இ) | 2019 மார்ச் 22 ஆந் திகதிய திருத்தப்பட்ட மதிப்பீட்டு வாடகையின் அடிப்படையில் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபைக்கு ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபா 27,575,100 ஆகும். மேலும் 2021 திசெம்பர் 14 ஆந் திகதியில் பொதுக் கூட்டத்தின் போது பெற்ற முன்மொழிவை அங்கீகரிக்கும் அடிப்படையில் 2022 சனவரி 01 ஆந் திகதி முதல் மதிப்பீட்டுப் பெறுமதியில் 50 சதவீத கடை வாடகையாக அறவிடப்படுகின்றது. | ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 50 சதவீத தொகையை அறவிடுவதற்கு பொருத்தமாக இருந்ததாக எடுக்கப்பட்ட பொதுச் சபைக் கூட்ட தீர்மானம் ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு 2022 சனவரி மாதம் முதல் உடன்படிக்கை செய்யப்படாமல் திருத்தப்பட்ட கடை வாடகை மதிப்பீட்டில் 50 சதவீத தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திருத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் உடன்படிக்கை செய்து கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | நிட்டம்புவ பேரூந்து தரிப்பிட நிலைய வளவில் உள்ள வங்கி மற்றும் கூட்டுத்தாபன சூழலில் மாதாந்த வாடகை அறிக்கை 2019 மே 16 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகையின் அடிப்படையில் அந்த நிறுவனங்களுடன் மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. புதிய மதிப்பீட்டின் பிரகாரம் 2019 மே 16 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 10 வரையான 2½ வருடங்களுக்கு உரித்தற்று போன வருமானம் ரூபா 5,700,000 ஆகும். மக்கள் வங்கிக்கு சொந்தமாக காணப்பட்ட 99 வருட குத்தகை உரித்துறுதியினால் உடன்படிக்கை செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது. | அந்த உடன்படிக்கை தொடர்பாக பிரதேச சபைக்கு ஏற்படுகின்ற நலன்கள் மற்றும் இடையூறுகள் தொடர்பாக சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் சிட்டையிடப்பட்டிருந்ததுடன் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் செலுத்துகின்றது. | மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு வாடகைக்கு உடன்படிக்கை செய்து வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அத்தனகல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய ரூபா 3,695,463,500 பெறுமதியான மயான நிலங்கள் மற்றும் 65 காணி கூறுகள் என்பன 2022 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மயான நிலங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை சபைக்கு கையேற்குமாறு அத்தனகல்ல பிரதேச செயலாளருக்கு 2012 முதல் கோரிக்கை விடப்பட்டுள்ளது. கையளிப்பதற்காக உரிய அங்கீகாரம் மாகாண காணி ஆணையாளரிடமிருந்து கோரப்பட்ட போதிலும் அது மேற்கொள்ளப் படாமையினால் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சபைக்குரிய காணிகளை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் | | |
| சபையில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 2010 ஆம் ஆண்டு முதல் அறவீடுகள் நிலுவையாக காணப்படுகின்ற தகவல்கள் எதுவும் கண்டறிய முடியாத 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 138,187 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் உயிருடன் உள்ளதுடன் இல்லாதிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பிணையாளர்களிடமிருந்து அறவிடுதல் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் தகவல்கள் பேணிச் செல்லப்படாத உத்தியோகத்தர் கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |